Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 173/2025** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW10** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | ரைமண்ட் |
| Father/Husband Name | : | ஜேம்ஸ் |
| Village | : | அக்காள்மடம், பாம்பன்,. |
| Taluk | : | இராமேஸ்வரம் |
| Calling | : | மீன்பிடி தொழில் |
| Religion | : | |
| Age | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.01.2026.

(எதிரி ஆஜர். )

**முதன்மை விசாரணை:–**

நான் இராமநாதபுரம் மாவட்டம்,ராமேஸ்வரம் தாலுகா பாம்பன் அக்காள்மடம் கிராமத்தில் வசித்து மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். சாட்சி புனிதனை தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன ஜோசப் கென்னடியை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 10.01.2025ம் தேதி மதியம் 02.45 மணியளவில் பாம்பன் ரயில்வே ஸ்டேனில் நானும், புனிதனும் ஒரு வேலையாக சென்று கொண்டிருந்தோம். அப்போது ரயில்வே ஸ்டேசனில் வைத்து மண்டபம் காவல் ஆய்வாளர் மற்றும் போலிசார் எதிரியை கைது செய்தார்கள். எதிரியை ஆய்வாளர் எங்கள் முன்பு விசாரணை செய்தார். எதிரி

தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலிசார் எழுதிக்கொண்டார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், புனிதனும் கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலுத்தில் ஜோசப் கென்னடியை கொலை செய்த அருவாளை வீட்டில் மறைத்து வைத்திருக்கிறேன் வந்தால் எடுத்துத் தருகிறேன் என்று சொன்னார். மாலை 04.30 –04.45 மணியளவில் எதிரி அவரது வீட்டிற்கு பின்பக்கம் அழைத்து சென்றார். அங்கு ஒரு பையில் மறைத்து வைத்திருந்த மரக்கைப்பிடியுடன் கூடிய வளைந்த அருவாள் மற்றும் வெள்ளை அரக்கு கலருடன் கூடிய கருப்பு கட்டம்போட்ட சட்டையை எடுத்துக்கொடுத்தார். அந்த சட்டை இரத்தத்துடன் இருந்தது. ஆய்வாளர் அதை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றி எங்களிடம் கையெழுத்து வாங்கினார். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் அருவாள்தான் எதிரி எடுத்துக்கொடுத்த அருவாள். அந்த அருவாள் **அ.சா.பொ.1**. எதிரி கொடுதத ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.6**. எதிரி அருவாளை எடுத்து ஆஜர் செய்தபோது ஆய்வாளர் தயார் செய்த அத்தாட்சி **அ.சா.ஆ.7**. என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் சட்டைதான் எதிரி ஆஜர்செய்த சட்டை. அந்த சட்டை **அ.சா.பொ.2**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:– இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.